பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

27 01 2025 **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டிலேயே முதல் மாநிலமாக பொது சிவில் சட்டத்தை உத்தராகண்ட் அரசு செயல்படுத்தியுள்ளது.
2. படைப்பாற்றல் பொருளாதாரத்தின் தலைநகரமாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
3. தமிழகத்தில் கூடுதல் மருத்துவக்கல்லூரிகளை ஏற்படுத்த மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
4. பெலாரஸ் நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய அதிபர் திரு **Alexander Lukashenko** வெற்றிபெற்றுள்ளார்.
5. மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான சிறந்த ஆட்டக்காரருக்கான ஐ சி சி-யின் விருது இந்தியாவின் ஸ்மிருதி மந்தனாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**<<<<>>>>>**

நாட்டிலேயே முதல் மாநிலமாக பொது சிவில் சட்டத்தை உத்தராகண்ட் அரசு செயல்படுத்தியுள்ளது.

இன்று டேராடூனில் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி, இம்மாநிலத்தில் ஆண்டுதோறும் இந்நாள் பொது சிவில் சட்ட தினமாக கொண்டாடப்படும் என்றார்.

இதற்கான இணையதள பதிவு தொடங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனை செயல்பாட்டுக்கு கொண்டுவந்ததன்மூலம், தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி, அனைத்து சமுதாயத்தினருக்குமான குறைந்தபட்ச திருமண வயது ஆண்களை பொறுத்தவரை 21-ஆகவும், பெண்களை பொறுத்தவரை 18-ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த சட்டத்தின்படி, சமுதாய பாகுபாடு இன்றி, பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

திருமணம் செய்துகொள்ளாமல் ஒன்றாக வாழும் தம்பதியினருக்கான பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு சொத்தில் சம உரிமை கிடைப்பதும் உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பொது சிவில் சட்டம் மகளிர் உரிமையை உறுதி செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பொது சிவில் சட்டம் எந்தவொரு சமுதாயத்திற்கும் எதிரானது அல்ல என்று அவர் தெளிவுபடுத்தினார்.

அரசியல் சாசனத்தின் 342-ஆவது பிரிவின்கீழ், பழங்குடியினருக்கான உரிமைகள் தொடரும் என்றும் திரு புஷ்கர் சிங் தாமி கூறினார்.

<<<<>>>>>>

படைப்பாற்றல் பொருளாதாரத்தின் தலைநகரமாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், வேவ்ஸ் விருதுகள் மற்றும் வர்த்தக சந்தையை அறிமுகப்படுத்தி அவர் பேசினார்.

நாட்டின் பாரம்பரியம் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நமது கலாச்சாரம் மற்றும் கதை சொல்லும்திறன் சர்வதேச அளவில் பெரிய வரவேற்பை பெற்றிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்சசியில் பேசிய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்திற்கு உலக அளவில் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக கூறினார்.

ஆயுர்வேதா மற்றும் யோகா உலக அளவில் பிரபலமடைந்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு சஞ்சய் **Jaju** பேசுகையில், வேவ்ஸ் வர்த்தக சந்தை ஊடகத்துறையின் விற்பனையாளர்கள் மற்றும் வாங்குவோரை ஒருங்கிணைக்கும் என்ற தெரிவித்தார்.

வேவ்ஸ் விருதுக்கான பரிந்துரைகள் அடுத்த மாதம் 15-ஆம் தேதி முதல் பெறப்படும் என்றும் திரு சஞ்சய் **Jaju** கூறினார்.

<<<<>>>>>>

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஆம் ஆத்மி கட்சியின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் ஒருங்கிணைப்பபாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் இன்று வெளியிட்டார்

புதுதில்லியில் இதனை வெளியிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 15 உறுதிமொழிகள் இந்த தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

மகளிருக்கு மாதந்தோறும் 2 ஆயிரத்து 100 ரூபாய், நிலுவை நீர்கட்டணங்கள் ரத்து, புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும், மருத்துவ சிகிச்சைக்கென புதிய திட்டம் உள்ளிட்டவை இதில் இடம்பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, பிஜேபி மற்றும் காங்கிரஸ் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி வருவதாகவும் திரு அரவிந்த் கெஜ்ரிவால் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>>>

மத்தியப்பிரதேச அரசின் அனைத்து திட்டங்களும் மக்களிடம் சென்றடைவதை உறுதி செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவ் கூறியுள்ளார்.

இந்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த மாதம் இதற்கென சிறப்பு முகாம் நடத்தப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

வீடு, வீடாக சென்று 63 திட்டங்களின் பலன்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

சட்டமேதை பாரத ரத்னா அம்பேத்கரின் கனவை பூர்த்தி செய்யும் வகையில் மத்தியப்பிரதேச அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு மோகன் யாதவ் தெரிவித்தார்.

**<<<<>>>>>>**

அஸ்ஸாமில் கல்வித்துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா கூறியுள்ளார்.

இன்று குவஹாத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலம் முழுவதும் அதிநவீன பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதியிலும் இத்தகைய அதிநவீன பள்ளிகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் கூறினார்.

**<<<<>>>>>>**

பஞ்சாபையொட்டிய எல்லைப்பகுதியில் கடந்த ஓராண்டில் மட்டும் எல்லைதாண்டி ஊடுருவ முயன்ற பாகிஸ்தானை சேர்ந்த ஐந்து பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக எல்லை பாதுகாப்புப்படையின் தலைமை இயக்குனர் திரு **Satish Khandare** கூறியுள்ளார்.

அம்ரிஸ்டரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த எல்லைப்பகுதியில் ஊடுருவ முயன்ற 30-க்கும் மேற்பட்டோர் சிறை பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

301 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

எல்லைப்பகுதியில் உள்ள கிராமங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் பாதுகாப்புப்படை வழங்கி வருவதாகவும் திரு **Satish Khandare** தெரிவித்தார்.

**<<<<>>>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேச மாநிலத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் உலக மிகப்பெரிய ஆன்மிக நிகழ்வான மகா கும்பமேளாவில் புனித நீராடுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதற்காக விரிவான ஏற்பாடுகளை அம்மாநில அரசு, மத்திய அரசோடு இணைந்து மேற்கொண்டுள்ளது.

பொதுமக்கள் எவ்வித சிரமமும் இன்றி புனித நீராடுவதற்காக தொழில்நுட்ப உதவியை பயன்படுத்தி, வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மத்திய அமைச்சர்கள் திரு அமித் ஷா, திரு கிரண் ரிஜிஜு உள்ளிட்டோர் இன்று புனித நீராடினார்.

இதுவரை 14 கோடிக்கும் மேற்பட்டோர் புனித நீராடியுள்ளனர்.

கடந்த 13-ஆம் தேதி தொடங்கிய மகா கும்பமேளா அடுத்த மாதம் 26-ஆம்தேதிவரை நடைபெறுகிறது.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

<<<<>>>>>>

தமிழகத்தில் கூடுதல் மருத்துவக்கல்லூரிகளை ஏற்படுத்துவதற்கான அவசியத்தை மத்திய அரசிடம் வலியுறுத்த இருப்பதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சரை விரைவில் சந்திக்க உள்ளதாக கூறினார்.

கடந்த மாதம் சில தேதிகளை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஒதுக்கியதாகவும், ஆனால் அந்த சமயத்தில் தாங்கள் அங்கு செல்ல இயலவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

புதுதில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கு பின்னர் மத்திய அமைச்சரை சந்தித்து இக்கோரிக்கை வலியுறுத்தப்படும் என்றும் திரு மா. சுப்பிரமணியன் கூறினார்.

<<<<>>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப் பிரிவு வழங்கும் ‘செய்திச்சுடர்’ நிகழ்ச்சியில், பத்மஸ்ரீ விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த சமையல் கலைஞர் செஃப் தாமோதரனுடன் எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<>>>>>>

பெலாரஸ் நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய அதிபர் திரு **Alexander Lukashenko** வெற்றிபெற்றுள்ளார்.

அந்நாட்டு தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள முதல்கட்ட வாக்கு எண்ணிக்கை நிலவரத்தில் 86 புள்ளி எட்டு இரண்டு சதவீத வாக்குகளை அவர் பெற்றுள்ளார்.

எஞ்சிய வேட்பாளர்கள் குறைந்த அளவே வாக்குகளை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டு சட்டப்படி 55 சதவீதத்திற்கும் கூடுதலாக வாக்குகளை பெறுவோர் அதிபராக தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>>>

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச பனிச்சிற்ப கண்காட்சியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

**Colorado**–வில் நடைபெற்ற கண்காட்சியில் இந்திய அணி இப்பதக்கத்தை கைப்பற்றியது.

<<<<>>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான கடந்த ஆண்டிற்கான ஐ சி சி-யின் சிறந்த ஆட்டக்காரருக்கான விருது இந்தியாவின் பும்ராவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டில் 71 வீக்கெட்டுகளை வீழ்த்தியதன்மூலம், அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற சாதனையையும் அவர் படைத்துள்ளார்.
இந்த விருதை பெறும், இந்தியாவை சேர்ந்த முதல் வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையையும் பும்ரா பெற்றுள்ளார்.
மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான சிறந்த ஆட்டக்காரர் விருதுக்கு இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

-------------

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின் காது கேளாதோருக்கான பிரிவில் இந்தியாவின் **Prithvi Sekar** பட்டம் வென்றார்.
மெல்போர்னில் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 6-3, 6-1 என்ற செட் கணக்கில் பிரான்சின் **Olivier Grave** –ஐ வென்றார்.

-------------

இந்தோனேஷியாவில் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்டோருக்கான **Mandiri** கோப்பை கால்பந்து போட்டியில் இன்று ஜோர்டான் 4-0 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

<<<<END>>>>>>